செ.வெ.எண் : 51/ மார்ச் நாள் : 23.03.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**
**சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்**
**தேர்தல் பார்வையாளர்கள்**
**மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் ஆய்வு.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (23.03.2021) சட்டமன்ற பொதுத்தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து, சட்டமன்ற தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தல் பார்வையாளர்கள், காவல் பார்வையாளர் மற்றும் தேர்தல் செலவினப் பார்வையாளர் ஆகியோர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

குறிப்பாக, பொதுத்தேர்தல் பார்வையாளர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) திரு.சொராப் பாபு,இ.ஆ.ப., (Thiru.Sorabh Babu, I.A.S.,) அவர்கள், (பரமக்குடி) திரு.விசோப் கென்யே, இ.ஆ.ப.,(Thiru.Wezope Kenye, I.A.S.,) அவர்கள், (திருவாடானை) திரு.அனுரக் வர்மா,இ.ஆ.ப.,(Thiru.Anurag Verma,I.A.S.,) அவர்கள், காவல் பார்வையாளராக திரு.அனூப் A செட்டி, இ.கா.ப.,(Thiru.Anoop A Shetty,I.P.S.,) அவர்கள், தேர்தல் செலவினப் பார்வையாளர்களாக (பரமக்குடி, திருவாடானை) திரு.சவுரப் துபே (Thiru.Saurabh Dubey,I.R.S.,) அவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் முன்னேற்பாடு நடவடிக்கைகள் அனைத்தும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்பட்டு வேட்பாளர்கள் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது. வாக்குப்பதிவிற்காக 1647 வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் 80 இடங்களில் அமைந்துள்ள 228 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்காக 8,305 அலுவலர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்ட பயிற்சி நிறைவேற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து, 25.03.2021 அன்று இரண்டாம் கட்ட பயிற்சியும், 05.04.2021 அன்று மூன்றாம் கட்ட பயிற்சியும் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்தல் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தபால் வாக்குச்சீட்டு பெறுவதற்கான படிவங்கள் பெறும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படும் தளவாட பொருட்கள் அனைத்தும் தயார்நிலையில் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல, தேர்தல் நன்னடத்தை விதிகள் கண்காணிப்பு பணிகளும் தொடர்ந்து விழிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இதுவரை 94 நேர்வுகளில் ரூ.1,12,98,890/- மதிப்பில் ரொக்கப் பணம் உரிய ஆவணமின்றி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதில், சம்மந்தப்பட்ட நபர்கள் மூலம் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து 74 நேர்வுகளில் ரூ.67,76,420/- மதிப்பில் பணம் விடுவிக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, பொதுத் தேர்தல் பார்வையாளர்கள் தெரிவிக்கையில்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் முன்னேற்பாடு நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் போதிய பாதுகாப்பு வசதிகளை உறுதி செய்திட வேண்டும். வாக்குச்சாவடி மையங்களுக்கு கொண்டு செல்லப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தளவாட பொருட்கள் அனைத்தையும் வாக்குப்பதிவு நிறைவடைந்த பின்பு முறையே வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதி செய்திட வேண்டும் என பொதுத் தேர்தல் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தல், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஏ.சிவகாமி, உதவி தேர்தல் அலுவலர்கள் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., (இராமநாதபுரம் சார் ஆட்சியர்) திரு.து.தங்கவேல் (பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர்), திரு.த.மரகதநாதன் (மாவட்ட வழங்கல் அலுவலர்) திரு.எஸ்.மணிமாறன் (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலவலர்) கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.லயோலா இக்னேஷியஸ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.எஸ்.சாமிநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) திரு.ஆர்.பழனிகுமார், (தேர்தல்) க.நஜிமுன்னிசா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**